
# மாத்யமம தர்ம சமாஜம்

மாலை 36 ஜுலை 2024 மலர் 3




பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்திர ஸரஸ்வதி சங்கராச்சாரியார் ஸ்வாமிகளின்
வ்யாஸ பூஜை - திருவானைக்காவல் ஜகத்குரு வித்யாஸ்தானம்



ஆனந்ததாண்டவபுரம்
ஸ்ரீ பஞ்சவடீஸ்வரர் கோவில் கும்பாபிஷேகம்




ஆனந்ததாண்டவபுரம்
ஸ்ரீ சதானந்த தீர்த்த ஸ்வாமிகள் ஆராதனை



ஸ்ரீராமசமுத்திரத்தில் (அயலூர்)
ஸ்ரீராமநவமி உத்ஸவம்



69-ஆம் ஆண்டு
பாவை மஹோத்ஸவ விழா-திப்பிராஜபுரம்



கோனேரிராஜபுரம் ஸ்ரீ உமாமகேஸ்வரர் ஆலயத்தில்
ஆனித் திருமஞ்சன விசேஷ அலங்காரம்



விஷ்ணுபுரம் ஸ்ரீ சிவன் கோவிலில்
ஆனித் திருமஞ்சன சிறப்பு அலங்காரம்

INTEGRATED
YOUR LONG TERM WEALTH PARTNER

# மாத்யம தர்ம சமாஜம்

Flat 1A, "Sri Chakra Sri Nilaya"
31/46, RK Shanmugam Road
KK Nagar, Chennai - 600 078.

மாலை 36 | ஜுலை 2024 | மலர் - 3 | விலை ₹ 50/-

Treasurer **K. Kalyanam . 9840062069**

**உறுப்பினர்களின் கவனத்திற்கு**

**விலாச மாற்றத்தை தெரிவிக்க** (SMS / email / whatsapp **மூலம் தெரிவிக்கலாம்)**

**மற்றும்** email id : mdsnewslettermaterials@gmail,com

**9884123419** மற்றும் **9841304358**

rsnathan54@gmail.com    jayakamala@hotmail.com

**சமாஜத்தின் வெப்சைட்** vathima.com

சமாஜ வங்கி கணக்கு விவரம் .

**CITY UNION BANK**

Maadhyama Dharma Samajam, T.Nagar Main Branch,
Chennai - 600017.
S/B A/c No. 001001000028464
IFSC . CIUB0000001

## AGM NOTICE

Notice is hear by given that the 40th AGM of our samajam will be held on Saturday, the 31st August, 2024 at The Kalyan Nagar Association, Mandavelipakkam, Chennai - 600028 at 6.00 pm.

Kindly make it convenient to attend.




**நமது சமாஜ**

**அங்கத்தினர்களுக்கு**

**இனிய சுதந்திரதின**

**வாழ்த்துக்கள்**

# தேதியூரில் ராதா கல்யாணம்

*ஸ்ரீமதி பிச்சை சுவாமிநாதன், தேதியூர்*



தேதியூரில் ராதாகல்யாணம், ஸ்ரீ பூமி நீளா ஸமேத ஸ்ரீ வரதராஜ பெருமாள் திருக்கோயில் 11–5–2024, 12–5–2024 சனி ஞாயிற்றுக்கிழமைகளிலும், பிரத்யட்ச பரமேஸ்வரர் கோயில் ஸம்வத்சர அபிஷேகம் என்ற பத்திரிகையை பார்த்ததும் அந்த நாள் ஞாபகம் வந்ததே என, ஊரை விட்டு வந்தாலும் ஒரு இனம் புரியாத மகிழ்ச்சி, எந்த ஊரு எந்தப் பட்டிணத்தில் இருந்தாலும் போனாலும் நம்ம ஊரு போலவருமா ? அந்த நினைவுகளை நினைத்தாலே இனிக்கும். தேதியூர் மண்ணில் காலடி வைத்ததும் மண் மணத்தது. மனம் இறக்கை கட்டி பறந்தது. கீழத் தெரு, நடுத்தெரு, மேலத்தெரு T வடிவில் உள்ளது. 150 வீடுகள் உள்ள (இருந்த) அக்ரஹாரம் : பணத்துக்கும் பட்டிண பகட்டு வாழ்க்கைக்கும் ஆசைப்பட்டு வீட்டை விற்றுவிட்டது : யாரையும் குறை கூறவில்லை. காலத்தின் கட்டாயம் : முஸ்லீம் கிராமமாகி, எஞ்சிய 15 வீடுகள் அக்ரஹாரம்தான் என முத்திரை, சங்கராபள்ளிக்கூடமும் அடையாள சின்னம். முஸ்லீம்கள் நிறைந்தாலும், சந்தனக்கூடும் உண்டு, செல்லி அம்மன் புறப்பாடும் உண்டு. இந்து முஸ்லீம் பாய் பாய் என இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு தேதியூர் எடுத்துக்காட்டாக உள்ளது. மேலத் தெருவில் பெருமாள் கோவில் ராதா கல்யாணம். பலராம பாகவதர் குழு பஜனை ஸம்பிரதாய பாடல்பாட, மாடியாத்து (கிட்டா மாமா ஸ்ரீராம்) வீட்டு ராதாகிருஷ்ணன் படம் அலங்கரிக்கப்பட்டு ஜொக்க, அதன் அழகில் மனம் லயித்து, சொக்க

வைத்தது. கிராமத்து வாரிசுகள், சீனுவாசன் சுந்தரேசன், முரளி தம்பதிகளாக வந்து, பஜனை திவ்யநாம பாடல்கள் பாடி ஆடி, இன்னும் பலரும் (மன்னிக்கவும் பெயர் தெரியவில்லை) பெண்களும் பாடி ஆடியது ஆத்மார்த்தமாக இருந்தது. மேலத்தெரு என்றதும் எந்த சத்காரியங்களிலும் ஈடுபாடுடன் முதல் வந்து செயல்படும் ராமன் இல்லாதது மிகவும் வருத்தமாக இருந்தது. அவர் வாரிசு சங்கரன் 'நான் இருக்கிறேன்' என உற்சாகத்துடன் செயல்பட்டார். ராமமூர்த்தி பஜனை பாடல்களைபாடி பாகவதராகி ராதாகல்யாணம் களை கட்டியது. திலீப், ரமணி, முரளி, ஸ்ரீராம் உற்சாகத்துடன் கலந்து கொண்டு மிகவும் கோலாகலமாக நடந்தது. ராதாகல்யாணம் சாதா கல்யாணமில்லை சூப்பர் கல்யாணமாக, ஜேஜே என நடந்தது. பக்கத்து ஊர்களிருந்தும், மற்ற தெருக்களிலிருந்து வந்து பார்த்து பெருமாளின் பக்தர்களாக கலந்து கொண்டார்கள். பஜனை பாடல்கள் ஆட்டம், பாட்டம் கண்ணுக்கும் காதுக்கும் விருந்து, வயிற்றுக்கும் வந்தவர்கள் அனைவருக்கும் மூன்று நாட்களும் மூன்று வேளையும் வடை, போளி, ஸ்வீட்டுடன் சுமங்கலி சத்திரத்தில் விருந்து கட்டுசாதத்துடன் : வந்தவர்கள் அனைவரும் பிரிய மனமில்லாமல் பிரியாவிடை பெற்று அடுத்த ராதா கல்யாணத்தில் சந்திப்போம் கட்டாயம் நாம் அனைவரும் வரவேண்டும் என்றனர். ப்ரத்யட்ச பரமேஸ்வர கோயில் ஸம்வத்ஸர அபிஷேகம் ஹோமம் சங்கல்பம், அபிஷேகம் அலங்காரம், அன்னதானம் என மிக சிறப்பாக நடந்தது. சங்கர ஜெயந்தி அன்று சங்கரா பள்ளியில் அவர் படத்துக்கு பூஜையும், ஆராதனையும் நடந்தது. திலீப், சாந்தி, ஆசிரியர் மற்றும் பலரும் கலந்து கொண்டோம்.

சின்ன சின்ன ஆசை சிறகடிக்கும் ஆசை : முத்து முத்து ஆசை ! இந்த முதிர்ந்தவளின் (அகவை 84 நிறைந்தவளின்) ஆசை : கிராமத்திலிருந்து நகரத்துக்கு சென்ற அனைத்து கிராம அக்ரஹார வாரிசு தங்கங்களே ! வருடத்துக்கு ஒருமுறையாவது தங்கள் குடும்பங்களுடன் கிராமங்களுக்கு குழந்தைகளுடன் வந்து செல்லுங்கள் : தாய் மண்ணை மறவாதீர்கள் : தாய் மண்ணே வணக்கம் !

# பூர்ணாபிஷேகம்

*ஸ்ரீமதி விசாலம், தேதியூர்*



கோனேரிராஜபுரம் D.ஸ்வாமிநாதன், S.மோஹாம்பாள் இருவருக்கும் பூர்ணாபிஷேகம் கும்பகோணத்தில் என் இல்லத்தில் விமரிசையாக நடந்தது. குடும்பத்தினர் அனைவரையும் ஒருசேர சந்தித்தது ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது. அம்மாவைப் பற்றி சொல்ல வேண்டுமானால் அவருடைய சிக்கனம்தான் முதல் சொல்லணும். கோனேரிராஜபுரத்தில் இருந்தவரை தேவைக்குமேல் அதிகப்படியாக வீட்டில் ஒன்னும் இருக்காது. Spic & Span ஆக இருக்கும் த்ரிகால ஸந்தயாவந்தனம், மாதாந்திர தர்ப்பணங்கள், வருடாந்திர பித்ரு, தேவகாரியங்களை விடாமல் முறையாக செய்வார். அதே சமயத்தில் டாம்பீகமாவும் செய்யமாட்டார். குழந்தைகளிடம் அன்பாகவும் இருப்பார். ஆனால் கண்டிப்பிலும் Strict ஆக இருப்பார். மாலை 6 மணிக்குமேல் வீதியில் இருக்கவிடமாட்டார். படிப்பில் எல்லோரும் கட்டாயமாக ஒரு Degree வாங்கணும் என்பார். நான்தான் Degree படிக்கவில்லை. வயல் விஷயமாக கிராமத்திற்கு போயிருந்தாலும் சரியாக Maths Exam போது வந்துவிடுவார். எங்களுக்கெல்லாம் சிம்ம சொப்பனமாக இருக்கம். இந்தி எதிர்ப்பு மாநாடு நடந்த சமயத்தில் (7 கேள்வி) எங்களை எல்லாம் இந்தி படிக்க வைத்தார். சிருங்கேரி பெரியவா தென்னகம் வந்தபோது, கிராமத்தில் யாரும் அழைக்காதபோது, துணிச்சலாக அவரை அகத்திற்கு அழைத்து, மரியாதைகள் செய்து வீட்டில் சந்த்ரமௌளீச்வரர் த்ரிபுரஸுந்தரி பூஜையை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்தார். இன்றளவும்

யாராவது கோனேரியிலிருந்து ச்ருங்கேரி பெரியவாளை பார்க்கசென்றால் அவர்களிடம் அவர் முதல் கேட்பது D.ஸ்வாமிநாதன் நன்றாக இருக்கிறாரா ? அவர்கள் குடும்பம் நன்றாக இருக்கா” என்றுதான் பெரியவர்களுக்கு எவ்வளவு கோடிக்கணக்கான பக்தர்கள் இருக்கிறீர்கள். அப்பாவை நினைவில் வைத்து கேட்பது அப்பாவின் முற்பிறவியின் புண்ய பலன்தான் பௌர்ணமியில் விடாமல் திருவண்ணாமலைக்கு கிரிவலம் செல்வார். சினிமா பார்க்க அனுமதிக்கமாட்டார். அவருடைய தேவைகள் ரொம்ப குறைவுதான். Simple Life தினமும் 2 கி.மீ. நடப்பார். 100 வயதிலும் அவருடைய ஆரோக்கியத்திற்கு அதுவும் காரணம். சாப்பாட்டு விஷயத்தில் ரொம்ப Strict கண்டதையெல்லாம் வாங்கி சாப்பிடுவது என்பதெல்லாம் கிடையாது. மொத்தத்தில் நாங்கள் அவரிடம் கற்றுக்கொண்ட பாடம் “சிறுக கட்டி பெருக வாழ்” என்பதுதான்.

அம்மாவைப்பற்றி எழுத ஆகாயம் போதாது. பொறுமையில் பூமி என்பார்கள். எங்கள் அம்மாவின் பொறுமை 18 வாத்திம கிராமம் அறிந்த உண்மை. கணவனுக்கு அனுகூல பத்தினியாக இருந்தாள். நாங்கள் (பெண்கள்) புக்ககம் போகும்வரை அவள் சமையல் உள் படி தாண்டி நாங்கள் பார்த்ததில்லை. காலை, மாலை விளக்கேற்ற வாசல் வருவாள். வாசல் இருந்தபடியே பிள்ளையாருக்கு குட்டிக்கொள்வாள். துர்க்கையை தரிசனம் செய்வாள். ஒரு கோவில் போனதில்லை. அவளிடம் எல்லோரும் கற்க வேண்டி பாடம் தினமும் மாலையில் விளக்கேற்றியவுடன் பாட்டிக்கு (தன்மாமியார்) நமஸ்காரம் செய்வாள். ஸௌந்தர்ய லஹரி, சிவானந்த லஹரி, முக பஞ்ச சதீ எல்லாம் அவளுக்கு புஸ்தகம் பார்க்காமலே தெரியும். ஒரு நாளும் ஸ்வாமி படத்தின் முன் நின்று சொல் நாங்கள் பார்த்ததில்லை. காலையிருந்து மாலைக்குள் எல்லாவற்றையும் மனதாலேயே சொல் முடித்து விடுவாள். கர்மயோகி வாழ்வில் எவ்வளவோ ஏற்ற இறக்கங்கள் வந்த போதிலும் வாய்விட்டு புலம்பாமல், பொறுமையாக, மௌனமாக எல்லாவற்றையும் எதிர்நோக்கி சமாளித்ததே அவளுடைய குணங்களில் 100ல் 10 பங்குகூட எனக்கு இல்லை. இவர்களை எங்கள் தாய் தந்தையாக அடைய நாங்கள் நிறைய புண்யங்கள் செய்திருக்கிறோம். அவர்களுடைய Life Style எங்களுக்கு ஒரு காவியம் அவர்களுடைய குணங்களை, வாழ்வின் குறை நிறைகளை தைரியமாக எதிர்நோக்கும் தன்மை பயமின்மை, தைரியம், சிக்கனம், கட்டுப்பாடு இவைகளை எங்கள் சந்ததிகளுக்கு அளித்தாலே போதும். அதுதான் நாங்கள் அவர்களுக்கு அளிக்கும் சொத்து.

## ஸ்ரீ ராமசமுத்திரத்தில் 78 ஆம் ஆண்டு ஸ்ரீ ராமநவமி மஹோத்ஸவம்

–ஸ்ரீ ஆர்.பிச்சுமணி, திப்பிராஜபுரம்

சித்திரை மாதம் 27–ம் நாள் வெள்ளிக்கிழமை (10–5–2024) முதல் ஞாயிற்றுக்கிழமை 29ஆம் நாள் (12–5–2024) வரை ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ காஞ்சி சங்கராச்சார்யார் ஸ்வாமிகள், ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சிருங்கேரி சங்கராச்சார்யார் ஸ்வாமிகள், ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஞானானந்த கிரி ஸ்வாமிகள், ஸ்ரீ ஹரிதாஸ் கிரி யவாமிகள், இ நாமாநந்த கிரி ஸ்வாமிகள் அவர்கள் அனுக்கிரஹத்தாலும், பாகவதோத்தமர்களின் அஷ்டபதி பஜனைகளாலும் ஸ்ரீ ஸீதா கல்யாண வைபவமும், ஸ்ரீ ஆஞ்சநேய உற்சவமும் ஸ்தல பாகவதர் ஸ்ரீ பாலசுப்ரமணியர் முன்னிலையில் அதி விமரிசையாக நடைபெற்றது.

10–5–2024 வெள்ளிக்கிழமை கணபதி ஹோமம் தொடர்ந்து உடையாளூர் ஸ்ரீ கல்யாணராம பாகவதர் மற்றும் அவரது குழுவினரின் அஷ்டபதி பஜனை மற்றும் திவ்யநாம பஜனை காலையிலும் மாலையிலும் நடைபெற்றன. ஸ்ரீ கல்யாணராம பாகவதரின் இனிமையான, மதுரமான குரலோசை செவிக்கு உணவாகவும் மனதிற்கு நிம்மதியையும் அளித்தன.

அன்று மாலை சென்னை ஸ்ரீ செல்வவிநாயகம் அவர்களின் ‘‘மஹாபாரதத்தில் பீஷ்மர்'' என்றசொற்பொழிவு சொல்லழகு, பொருள் அழகு, நடை அழகு கூடியதாக சிறப்பாக அமைந்தது.

11–5–2024 சனிக்கிழமை காலையிலும், இரவிலும் ஸ்ரீ ஞானானந்த நாமசங்கீர்த்தன மண்டயாரின் அஷ்டபதி பஜனைகளும், திவ்யநாம கீர்த்தனமும், டோலோத்ஸவமும் 20 ஆண்டுகளுக்கு மேலாக இதே ஸ்தலத்தில் ஸ்ரீ ஹரிதாஸ் ஸ்வாமிகள் நடத்திய பஜனையின் தாக்கத்தை பக்தர்களின் மனங்களில் ஏற்படுத்தி அவர்களை பக்தி, ஆன்மீக அளவில் உச்ச கட்டத்திற்கு கொண்டு சென்றது. ஸ்ரீராம சமுத்திர ஸ்ரீராம் பஜன் மண்டயரின் திவ்யநாம பஜனை விறுவிறுப்பாக, பக்தி உணர்ச்சி

வெள்ளத்தில் பக்தர்களை மூழ்கடிக்க செய்தது.

12–5–2024 ஞாயிற்றுக்கிழமை அன்று உஞ்சவிருத்தியை தொடர்ந்து, அஷ்டபதி பஜனையோடு ஸ்ரீஸீதா கல்யாண வைபவம் கோலாகலமாக மாயவரம் ஸ்ரீ ஞானகுரு பாகவதரால் நிகழ்த்தப்பட்டது. அன்று இரவு விடிய விடிய ஸ்ரீ ஞானகுரு பாகவதரால் வஸந்த கேளிக்கை, பவ்வளிம்பு, ஸ்ரீ ஆஞ்சநேய உத்ஸவம் நடைபெற்றது. உத்ஸவம் இனிதாக, மங்களகரமாக முடிவுற்றது.

ஸ்ரீராம சமுத்திரம் திரு மாரிமுத்து குழுவினரின் மங்களவாத்தியம் பாராட்டும்படி இருந்தது. திருச்சி ஸ்ரீ ரமேஷ் அவர்களின் தியாக பிரும்ம கிருதிகள் ஆன்மாவை ஏங்கிட செய்தன.

மூன்று நாட்களும் நாகை நல்லூரின் ஸ்ரீராமஜெயம் கேட்டரிங்கின் சேவை குறிப்பிட தக்கது.

ஸ்ரீராம் ஜெயராம் ! ஜெய ஜெயராம் !!

## MDS திறன் மேம்பாட்டு மையம்

செம்மங்குடி கிராமப்புற மாணவர்களின் வளர்ச்சிக்காக பல்வேறு பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது. தற்போது 10 வது முறையாக அரசுத் தட்டச்சுத் தேர்விற்கு மாணவர்களை அனுப்ப பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கணினி தொடர்பான வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகிறது.

செம்மங்குடி திறன் மேம்பாட்டு மையத்தில் கல்வி சக்தி இயக்கம் மூலமாக ONLINE CLASSES நடத்தப்பட்டு வருகிறது. நமது சமாஜ உறுப்பினர் தேதியூர் திரு. சங்கர் அவர்கள் நமது திறன் மேம்பாட்டு மையத்திற்கு வருகை தந்து திறன் மேம்பாட்டு மையம் தொடர்பான விவரங்களை மேற்பார்வையிட்டார்.

## வாத்யம பிக்ஷாவந்தனம்



ஸ்ரீ மஹாபெரியவா ஜயந்தி புண்யதினத்தில் நமது வாத்யம பிக்ஷாவந்தனக் கமிட்டியின் சார்பாக ஸ்ரீமடம் காஞ்சிபுரத்தில் பிக்ஷாவந்தனம் 24 – 5 – 2024 வெள்ளிக்கிழமை அன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

நமது சமாஜத்தின் உபதலைவர் ஸ்ரீ P. வைத்தியநாதன், முன்னாள் செயலர் ஸ்ரீ A.S. கல்யாணம், பிக்ஷாவந்தனக் கமிட்டியின் அறங்காவலர் ஸ்ரீ N.காமகோடி மற்றும் பலரும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டு நமது சமூகத்தின் நலனுக்கும் லோகக்ஷேமத்திற்கும் சங்கல்பம் செய்துகொண்டு ஸ்ரீ த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்த்ரமௌலீஸ்வரரின் அனுக்ரஹத்தையும் ஸ்ரீபெரியவாளின் பரிபூரண ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டனர்.

## காஞ்சி மடத்தை தொடர்பு கொள்வதற்கான வழி



பல தலைமுறைகளாக நமது வாத்திமா சமூகம் காஞ்சி மடத்துடன் எப்போதும் நெருங்கிய தொடர்புடையது என்பதை நாம் அனைவரும் அறிவோம். நம்மில் பெரும்பாலோர் மடத்துக்குச் செல்லும் போது ஸ்ரீ பெரியவா நமது வாத்திமா பின்னணியைப் பற்றி மேலும் விசாரித்து மற்றஉறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ளும்படி செய்யும் முக்கியத்துவத்தைப் பார்த்திருப்போம். இப்போது காஞ்சி மடத்தில் வாத்திமா சமூகத்திற்கு என ஸ்ரீ கிருஷ்ணனை காஞ்சி மடத்தில் நியமித்திருக்கிறார்கள். காஞ்சி மடம் போவது, பிக்ஷா வந்தனம், மடத்தின் முகாம், மற்றும் பிறசெயல்பாடுகள் பற்றி மேலும் அறியவும் ஸ்ரீ கிருஷ்ணன் / **94446 93226** அவர்களை காஞ்சி மடத்தில் தொடர்பு கொள்ளலாம் அல்லது இதே நம்பருக்கு whatsapp இல் வாய்ஸ் மெசேஜ் அனுப்பலாம்.

# காஷ்மீர் சங்கர ஜயந்தி 2024 அனுபவம்

– ஸ்ரீமதி சுபாஷினி ராதாகிருஷ்ணன்



ஆண்டுதோறும் திருமதி சீதா சபேசன் அவர்களால் செவ்வனே செய்யப்பட்டு வருகின்றகாஷ்மீர சங்கர ஜயந்தி விழாவில் கலந்து கொள்ளும் பெரும் பாக்கியம் பெரியவாளின் அருளால் இந்த வருடம் எனக்கு கிட்டியது.

ஒருவருக்கு ரூ.40,000 என்ற விகிதத்தில் 7 நாட்கள் பயணமாக அமைந்தது. இந்த மகத்தான பயணத்திற்கு எத்தனை கொடுத்தாலும் தகும். காஷ்மீரில் சமைப்பதற்கு பரிசாரகன்கள் சென்னையிலிருந்து எங்களுடன் பயணித்தார்கள்.

காலை 6 மணிக்கு காபி, காலை 9 மணி சம்பா ரவா கஞ்சி (unlimited)

மதியம் 1.30 மணிக்கு மதிய உணவு (கரி, கூட்டு, சாம்பார், ரசம், அப்பளம், வடை, சித்ரான்னம், பாயசம், ஊறுகாய்) வேதபிராமணர்கள் போஜனம் செய்த பிறகு தான் மற்றவர்களுக்கு உணவு பரிமாறப்படும்.

மாலை 5.30 தேநீர், இரவு 8.30 மணி இரவு உணவு (வெரைட்டி உப்புமா + தயிர் சாதம் அல்லது தயிர் அவல்) வேத பிராமணர்கள் சாப்பிட்டு முடித்ததும் பரிமாறப்பட்டது.

நாங்கள் வெளியில் செல்வதற்கு மிகவும் எளிதாக ஜேஷ்டா மாதா கோவிலுக்கு அருகில் அறைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பெரியவாளின் ஆக்ஞைபடி அனுபவம் வாய்ந்த வேதப் பிராமணர்களால் கணபதி ஹோமம், சுதர்சன ஹோமம், ம்ருதுஞ்ஜய ஹோமம், தன்வந்திரி ஹோமம், இஷ்டி போன்று ஒரு நாளைக்கு ஒரு ஹோமம் செய்கிறார்கள்.

உஞ்சவிருத்தி / திவ்யநாமம் / முத்து கூத்தலுடன் சீதா கல்யாணம் செய்ய ஒவ்வொரு ஆண்டும் ஒரு பாகவதர் பெரியவாளால் பரிந்துரைக்கப்படுவார்கள். இந்த ஆண்டு சீர்காழி ஸ்ரீ சட்டநாத பாகவதர் மற்றும் குழுவினர் செய்தனர். சீதா கல்யாண உத்ஸவம் பத்ததியாக சம்ப்ரதாயத்துடன் நடந்தது.

தினமும் மாலை 7 மணிக்கு வேதகோஷம் / ஷோடஷ உபசாரத்துடன் ஆதிசங்கரர் திருஉருவப்படம் பல்லக்கில் ஜேஷ்டா மாதா கோவிலை சுற்றி புறப்பாடு நடக்கும்.

மதிய உணவுக்குப் பிறகு, ஒவ்வொரு நாளும் தங்கும் இடத்தைச் சுற்றி ஒரு சிறிய பயணம் மேற்கொண்டோம்.

நாள் 1 : தால் ஏரியில் படகு சவாரி / ஷாப்பிங்
நாள் 2 : கீர் பவானி
நாள் 3 : ஹரிகோட் சுயம்பு ஸ்ரீசக்கரம்
நாள் 4 : இராணுவ சிவன் கோவில்
நாள் 5 : முகல் கார்டன்
நாள் 6 : சங்கரா மலை

சுமங்கலிப் பெண்களுக்கு சுவாசினி பூஜை ஏற்பாடு செய்திருந்தனர். கலந்து கொண்டவர்களுக்கு புடவை மற்றும் மாங்கல்யம் செட் வழங்கப்பட்டது.

திரும்பும் நாளில், எங்கள் அனைவருக்கும் சிற்றுண்டி + மதிய உணவை அவர்கள் பேக் செய்து கொடுத்தார்கள்.

இது எங்கள் அனைவருக்கும் ஓர் தெய்வீக அனுபவம். எங்கள் அனைவருக்கும் பகவத் க்ருபையால் சங்கர ஜயந்தி வைபவத்தில் கலந்து கொள்ளும் பாக்யம் கிட்டியது.

ஹர ஹர சங்கர ! ஜெய ஜெய சங்கர!!

## ஆனந்ததாண்டவபுரம்
## ஸ்ரீ பஞ்சவடீஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம்

ஆனந்ததாண்டவபுரம் கிராமத்தில் அருள்பாலிக்கும் ஸ்ரீ பஞ்சவடீஸ்வரர் திருக்கோயில் கும்பாபிஷேகம் குரோதி வருஷம் சித்திரை மாதம் 20ம் நாள் வெள்ளிக்கிழமை (3rd May 2024. Friday) சதய நக்ஷத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 8.30 மணிக்கு மேல் 9.30 மணிக்குள் மிதுன லக்னம் சுபவேளையில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சாரியர் சுவாமிகள் அருளாசியுடன், குருவருளும் திருவருளும் துணைகொண்டு மற்றும் ஸ்ரீமான் வைத்தியநாதன் (ஸ்ரீ P.V.ஆடிட்டர், இன்டக்கிரேடட்), ஸ்ரீ துர்கா மணி சுந்தர கீதா பாகவத டிரஸ்ட், ANP பக்த சமாஜம், கிராமவாசிகள் ஆகியோரின் பெரு முயற்சியால் ஸ்ரீ சிவன் ஆலயத்தில் உள்ள பழுதுகளை நீக்கி வண்ணம் தீட்டி அழகு செய்து பகவத் கிருபையால் புனராவர்த்தன ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் மிக மிக சிறப்பாக நடைபெற்றது.


## ஸ்ரீ சதானந்த தீர்த்த ஸ்வாமிகள் ஆராதனை

– ஆனந்ததாண்டவபுரம் ஸ்ரீ சு.நாராயணன் (தொந்தியாம்)

நமது ஆனந்ததாண்டவபுரம் கிராமத்தில் ஸ்ரீ சதானந்த தீர்த்த ஸ்வாமிகள் ஆராதனை சனிக்கிழமை 06.07.24 அன்று காலை 8.30 மணி முதல் மதியம் 12 மணி வரையில் மிகவும் சிறப்பான முறையில் யாத்ரி நிவாஸ் கிரஹத்தில் நடந்தேறியது.

காலையில் அதிஷ்டானத்தில் அபிஷேகம், அர்ச்சனை மற்றும் தீபாராதனை, நம்ம ஊர் அர்ச்சகர் ஸ்ரீ கௌரிசங்கர் சிவாச்சாரியார் மற்றும் ஸ்ரீ சிவா சிவாச்சாரியார் முன்னிலையில் வேத பண்டிதர்கள் வேத கோஷத்துடன் கிராமவாசிகள் முழு பங்களிப்புடன் சிறப்பாக நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக, ஆராதனை "யாத்ரி நிவாஸ்"ல் ராமதாஸ் மாமா மகன் ஸ்ரீ வைத்து அண்ணா சங்கல்பம் செய்து கொண்டு 4 சத்தான வாத்தியார்கள் வைத்து எல்லாவற்றையும் பூர்த்தி செய்தோம். வைத்து அண்ணாவுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

இவ்வைபவத்தில் பங்கேற்ற திரு பாலகணேசன் (SAS ஆம் ). திரு. & திருமதி MRS. திரு & திருமதி பஞ்சு (டாடா முத்துகிருஷ்ணன் மாமா), திரு. ராஜு மாமா, திரு. ராமன் மாமா, திரு கிட்டு, திரு & திருமதி சுந்தர்ராமன், திருமதி ஜெயந்தி மற்றும் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள். இதில் சமையல்காரர் மற்றும் திரு பாலமுருகன், திரு மாரி போன்றவர்களின் சேவை விழா சிறக்க உதவியாக இருந்தது. இந்த ஆராதனை சிறப்பாக நடைபெற பொருளுதவி செய்த தர்ம மகாராஜாகளுக்கு எங்கள் உள்ளபூர்வமான நன்றிகள். வரும் காலங்களில் மேலும் சிறப்பாக நடைபெற உங்கள் எல்லோருடைய பங்களிப்பும் பொருளுதவியும் இருக்க வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறோம். இந்த ஆராதனை வரும் ஆண்டுகளில் உங்கள் எல்லோருடைய ஆதரவுடன் இன்னும் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.




## யாத்ரி நிவாஸ்

நமது ஆனந்ததாண்டவபுரம் கிராமத்தில் ஒற்றைத் தெருவில் அமைந்துள்ள, காலஞ்சென்ற திருமதி. ஜானகியம்மாள் – திரு. K.நாராயணஸ்வாமி ஐயர், திருமதி. கமலாம்பாள் – திரு. N.பஞ்சாபகேச ஐயர் வம்சத்தின் பாரம்பர்ய க்ருஹம் ‘ஆத்தப்பாவாம்’ என்றழைக்கப்படுகிறது.

இக்குடும்பத்தின் அடுத்த தலைமுறையினரான திரு. P.வைத்யநாதன் தற்போது கும்பகோணத்திலும் சென்னையிலும் வசித்து வருகிறார். பட்டயக் கணக்கறிஞரான இவர் துவங்கிய நிறுவனமே இன்று இந்தியா முழுவதும் பல்வேறு கிளைகளுடன் நிதித்துறையில் மிகவும் திறம்படச் செயலாற்றி வரும் இண்டெக்ரேடட் எண்டர்ப்ரைசஸ் (Integrated Enterprises) ஆகும்.

திருமதி. பத்மா – திரு. P. வைத்யநாதன் தம்பதி இவர்களது

இப்பாரம்பர்ய க்ருஹத்தை 'யாத்ரி நிவாஸ்' என்னும் பெயருடன் நமது காஞ்சி காமகோடி பீடத்திற்கு நன்கொடையாக அளித்துள்ளனர்.

இந்த க்ருஹத்திற்கு நமது ஸ்ரீ ஸ்ரீ பெரியவா அவர்கள் கடந்த சார்வரி வருடம் ஆடி மாதம் 3ம் நாள் (ஜூலை 18, 2020) தமது சோழ தேச விஜய யாத்திரையின் போது வருகை தந்து இக்குடும்பத்தினர்க்கு அருளாசி வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீப்ரஹந்நாயகி, ஸ்ரீகல்யாணசுந்தரி ஸமேத ஸ்ரீபஞ்சவடீஸ்வரர் ஆலய மஹாகும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றபுண்யதினமான நிகழும் ஸ்ரீக்ரோதி வருடம் சித்திரை மாதம் 20ம் நாள் வெள்ளிக்கிழமை (மே 03, 2024) அன்று காலையில் ஸ்ரீ கணபதி ஹோமம், ஸ்ரீ நவக்ரஹ ஹோமம் ஆகியவை வேத விற்பன்னர்களால் செய்விக்கப்பட்டு முறைப்படி இக்கிருஹத்தை நமது ஸ்ரீமடத்திடம் ஒப்புவித்தினர்.

இதன் மூலம் நமது கிராமங்களுக்கு க்ஷேத்ராடனம் செய்யும் நமது சமூகத்தினருக்கும், யாத்ரீகர்களுக்கும் நல்ல வசதியான தங்குமிடம் கிடைத்துள்ளது. இன்னும் ஓரிரு மாதங்களில் ஆகார வசதியும் செய்து கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இங்கேயே தங்கிக்கொண்டு அருகிலுள்ள பல்வேறு க்ஷேத்ரங்களுக்கும் சென்று தரிசனம் செய்து வரலாம்.

வரும் நாட்களில் இக்கிராமத்தில் நடைபெறும் ஸத்கார்யங்களுக்கும், ப்ரவசனம், கதாகாலக்ஷேபம், நாமசங்கீர்த்தனம் போன்ற வைபவங்களுக்கும் இக்கிருஹம் மிகவும் உபயோகமாக இருக்கும்.

மனமுவந்து தங்களது பூர்வீக க்ருஹத்தை நமது ப்ராஹ்மண சமூகத்தினர் அனைவர்க்கும் நல்ல முறையில் பயன்படும் வகையில் ஸ்ரீமடத்திற்கு நன்கொடையாக அளித்துள்ள இக்குடும்பத்தினர்க்கு ஸ்ரீபெரியவாளின் பரிபூரண ஆசீர்வாதங்களும் நமது சமாஜத்தின் பாராட்டுகளும் உரித்தாகுகின்றன.

திரு வைத்யநாதன் அவர்கள் தங்களது 'மண்ணின் மைந்தர்' என்பதில் ஆனந்ததாண்டவபுரம் கிராமத்தினர் மிகவும் பெருமை கொள்கின்றனர்.

# தேதியூரின் சாதனை

– தேதியூர் ஸ்ரீ பி.நாகோஜி

கீழ்க்கண்ட பள்ளி ஆசிரியர்கள் தேதியூரில் வசித்துக்கொண்டு, பல பள்ளிகளில் பணியாற்றி வந்தனர். அவர்கள் பணி செய்த வருடங்கள் வேறுபடலாம், ஆனால் ஒரே ஊரில் வசித்து வந்து, ஆசிரியப் பணி புரிந்தது மிகவும் அருமையானது.

ஒரே கிராமத்தில் இருந்து இத்தனை பள்ளி ஆசிரியர்கள் ஒரே சமயத்தில் வசித்து வந்தது இதுவரை கேட்டிராத ஆச்சரியமான ஒரு விஷயம்.

**1975க்கு முன்பு தேதியூரில் இருந்த ஆசிரியர்கள்.**

1. சாமி சார் (சங்கரா பள்ளி முன்னாள் தலைமை ஆசிரியர்) – கீழத்தெரு
2. கிட்டா சார் – மேலத்தெரு – SSMS
3. புதூர் சார் – கீழத்தெரு – SSMS
4. சமஸ்க்ருத பண்டிட் சார் – மேலத்தெரு – GHS
5. வைத்தா சார் – நடுத்தெரு – SSMS
6. ஏகாம்பரம் சார் – மேலத்தெரு – SSMS
7. அலவந்திபுரம் மணி சார் – கீழத்தெரு– SSMS
8. யூ மணி சார் – மேலத்தெரு – SSMS
9. பட்டாபி சார் GHS – கீழத்தெரு (பிறகு விஷ்ணுபுரம் சென்றார்)
10. அகிலம் டீச்சர் – நடுத்தெரு – SSMS
11. வசந்தா டீச்சர் – மேலத்தெரு – SSMS
12. பா கணேசன் சார் – கீழத்தெரு – GHS
13. ராமசாமி சார் – மேலத்தெரு (பிறகு விஷ்ணுபுரம் சென்றார்) – GHS
14. சாம்பசிவம் சார் – வெள்ளாளர் தெரு – தேதியூர் – SSMS
15. விட்டல் சார் – மேலத்தெரு – SSMS
16. பிச்சா சார் – கீழத்தெரு – நாட்டு வைத்தியம் தெரிந்தவர் – SSMS
17. வெங்கட்ராமன் சார் (திரு சாக்கண்ணா சாஸ்திரிகள்) – நடுத்தெரு – குடவாசல் ஓகை அரசுப் பள்ளி
18. E.V.கோபால சார் – கீழத்தெரு – GHS
19. T.S.ஸ்ரீனிவாசன் சார் – கீழத்தெரு – GHS
20. BALT சுப்ரமணியன் சார் – கீழத்தெரு – GHS
21. C.சடகோபன் சார் – மேலத்தெரு – GHS
22. வீர ராகவன் சார் – Hindi Pandit – கீழத்தெரு – GHS
23. பிச்சா சார் – SSMS – நடுத்தெரு – 1975ல் ரிடையர் ஆனார்.
24. ராமபத்ரன் சார் – மேலத்தெரு – GHS
25. ராமையன் சார் (Kavithai) – கீழத்தெரு – Eravancheri PU school
26. பாலசுப்ரமணியன் சார் – கீழத்தெரு – Eravanchri PU school HM
27. செல்லமுத்து சார் – தெற்குத்தெரு – தேதியூர் – Eravanchri PU school

**28.** **நாகம்மா டீச்சர் – தெற்குத்தெரு – தேதியூர் –** Eravanchri PU school
**29.** **சுந்தரமூர்த்தி சார் – கீழத்தெரு –** Eravanchri PU school HM
**30.** **கரண்ட் ராமையா சார் – கீழத்தெரு –** Eravanchri PU school
**31.** AVM **கோபாலன் சார் (சுந்தரேச சாரின் தம்பி) –** Untrained teacher in SSMS
**32.** **ராமமூர்த்தி சார் (நாச்சு மாமா அவர்களின் அண்ணா) –** Untrained teacher in **சாவடி பள்ளிக்கூடம்**
**33.** **அம்பி சார் (சுவாமி நாதன்) – நடுத்தெரு –** SSMS **– பட்டாமணியார்**
**34.** **பஞ்சு சார் – நடுத்தெரு –** SSMS
**35.** K.S.**க்ருஷ்ணன் சார் – மேலத்தெரு –** GHS
**36.** **ஷேக் அலாவுதீன் சார் – மேலத்தெரு – மானந்தகுடி பள்ளி**
**37.** **ஸ்டானிஸ்லஸ் சார் –** (tailor Santhanam's Brother) **– கம்மாளர் தெரு –** GHS
**38.** **முடிகொண்டான் சார் – கீழத்தெரு –** PUSE **– பிறகு விஷ்ணுபுரம் சென்றார்**
**39.** **காளிங்கமூர்த்தி சார் – மேலத்தெரு –** GHS **– பிறகு விஷ்ணுபுரம் சென்றார்**

**1975 இல் இருந்து 2000 வரை.**

SSMS - Sri Sankara Middle School
GHS - George High School
PUSE - Panchayat Union School Eravancheri

**1.** N. **கணபதி சார் (முன்னாள்** HM. SSMS**) – கீழத்தெரு**
**2.** G. **பாலகிருஷ்ணன் சார்** (G.B Sir) GHS **– கீழத்தெரு**
**3.** **மாந்தை கோ. கணபதி சார் –** SSMS **– கீழத்தெரு**
**4.** N.**பாலு சார் –** GHS **– கீழத்தெரு**
**5.** **சின்ன பாலு சார் (சிவனாம்) –** SSMS **– பிற்காலத்தில் திருச்சி சென்றார் – கீழத்தெரு**
**6.** S.**வெங்கட்ராமன் சார்** (HM. GHS) **– கீழத்தெரு**
**7.** **ராமமூர்த்தி சார் –** SSMS **– கீழத்தெரு**
**8.** **முரளி சார் –** SSMS **– கீழத்தெரு**
**9.** **ராஜகோபால சார்** (Poonthottam school) **– கீழத்தெரு**
**10.** **பூமா டீச்சர் –** PUSE **– கீழத்தெரு**
**11.** **இரா.க. சார் –** GHS **– கீழத்தெரு**
**12.** **விசு சார் –** PET. GHS **– கீழத்தெரு**
**13.** **ரமணி சார் –** PET GHS **– கீழத்தெரு**
**14.** **தமிழ் பண்டிட் இராம கிருஷ்ணன் சார் –** SSMS **– கீழத்தெரு**
**15.** **பிச்சுமணி சார் –** SSMS **– கீழத்தெரு**
**16.** **மங்களம் டீச்சர் –** PUSE **– கீழத்தெரு**
**17.** **இராதா டீச்சர் –** SSMS **(மாற்றலாகி இப்போது குடந்தையில் உள்ளார்) – கீழத்தெரு**
**18.** **பத்மாவதி டீச்சர் –** SSMS **– கீழத்தெரு**

19. கண்ணன் சார் (சீனிவாசன்) – GHS – கீழத்தெரு
20. GN சார் (பிற்காலத்தில் நாகை சென்று விட்டார்) – GHS – கீழத்தெரு
21. சுந்தர்ராமன் சார் – கீழத்தெரு – GHS
22. ஜயஸ்ரீ டீச்சர் – சுந்தர்ராமன் அவர்களின் மனைவி – கீழத்தெரு – PUSE
23. பிச்சை சார் – சுந்தர்ராமன் அவர்களின் தந்தை – கீழத்தெரு – செம்மங்குடி பள்ளி
24. சாந்தி டீச்சர் – கீழத்தெரு – SSMS – (பிறகு மேலத்தெரு சென்றார்)
25. கல்யாணம் சார் – Marathukudi school – நடுத்தெரு
26. கோபால சார் (கல்யாணம் அவர்களின் தந்தை) – PUSE – நடுத்தெரு
27. கோபால சார் – GHS – நடுத்தெரு
28. பரசு சார் – GHS – நடுத்தெரு
29. ராஜம் டீச்சர் – PUSE – நடுத்தெரு
30. L.S.சார் – PET GHS – நடுத்தெரு
31. கண்ணன் சார் (லக்ஷ்மணன், S/O L.S.Sir) – SSMS – நடுத்தெரு
32. வெங்கடேச சார் – GHS – நடுத்தெரு
33. MSN சார் ஹிந்தி பண்டிட் – GHS. PUSE – நடுத்தெரு
34. நாராயணசாமி (நானம்பி) சார் – SSMS – மேலத்தெரு
35. சுந்தரேச சார் – GHS – மேலத்தெரு
36. நாராயண சார் – Marathukudi school – மேலத்தெரு
37. குருமூர்த்தி சார் – Marathukudi school – மேலத்தெரு
38. ராஜி டீச்சர் – SSMS – மேலத்தெரு
39. பெரிய பாலு சார் (தேதியூர் பாலு என்ற பெயரில் எழுதுவார்) – SSMS – மேலத்தெரு
40. ராமமூர்த்தி சார் (சுரக்குடி) – GHS – மேலத்தெரு, பிறகு கீழத்தெரு
41. மஹாலிங்கம் சார் (SSMS) – கம்மாளர் தெரு – தேதியூர்
42. மணி சார் (SSMS) – தெற்குத்தெரு – தேதியூர்
43. ஞானசம்பந்தம் சார் (PUSE) – கம்மாளர் தெரு – தேதியூர்
44. ஜயமேரி டீச்சர் – தேதியூர் – மாதாகோவில் மணவாள நல்லூர்
45. சுசீலா டீச்சர் – தேதியூர் – மாதாகோவில் மணவாள நல்லூர்
46. ராஜாத்தி டீச்சர் – தேதியூர் – மாதாகோவில் மணவாள நல்லூர்
47. வைத்திலிங்கம் சார் – வெள்ளாளர் தெரு – தேதியூர் – புதுக்குடி பள்ளி
48. ரவி சார் – வெள்ளாளர் தெரு – தேதியூர்
49. மதியழகன் சார் – கம்மாளர் தெரு – தேதியூர் – முதலில் நாகை, பிறகு விஷ்ணுபுரம் பள்ளி
50. ராஜேஸ்வரி – ம்யூசிக் டீச்சர் GHS – நடுத்தெரு
51. மஹாலிங்கம் சார் (மாலி சார்) – மேலத்தெரு – GHS – பிறகு மாயூரம் சென்று, பிறகு விஷ்ணுபுரம் சென்றார்

## நாதத்வீபம் டிரஸ்ட்-ன் வெள்ளி விழா கொண்டாட்டம்

சங்கீத சக்ரவர்த்தி திருச்சி ஸ்ரீ K.ரமேஷ் அவர்களின் நாதத்வீபம் டிரஸ்ட் மற்றும் சங்கீத குருகுலத்தின் ஆண்டுவிழா திருச்சியில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு "பத்ம விபூஷன்", சங்கீத கலாநிதி செம்மங்குடி Dr.R.சீனிவாசய்யர்அவர்களின் 116–வது பிறந்தநாள் கொண்டாட்டம் மற்றும் சங்கீத வித்வான் பூச்சி ஸ்ரீ ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்களின் 164–வது பிறந்தநாள் மற்றும் சங்கீத கலாநிதி Dr.ஷேக் சின்ன மௌலானா அவர்களின் 100–வது பிறந்தநாள் கொண்டாட்டம் என முப்பெரும் விழாவாக 13–7–24 சனிக்கிழமை முதல் 16–7–24 செவ்வாய்க்கிழமை வரை யோகா கல்யாண மஹால், திருச்சியில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இதைக் கொண்டாடும் விதமாக நூறு வயதைத் தொட்ட "மிருதங்கம் வித்வான்" சங்கீத கலாநிதி ஸ்ரீ Dr.T.K.மூர்த்தி அவர்களுக்கு பாராட்டு விழா ஏயற்பாடு செய்யப்பட்டது.

நாதத்வீப கலாநிதி என்றபட்டம் நாகை ஸ்ரீ R.முரளிதரன் (வயலின் வித்வான்) அவர்களுக்கும், நாதத்வீப ரத்னாகரா ஸ்ரீ Dr.சுரேஷ் வைத்யநாதன் (கடம் வித்வான்) அவர்களுக்கும், நாதத்வீப சேவா ரத்னா ஸ்ரீ K.ஸ்ரீநிவாசன் (ஸ்ரீரங்கம் தியாகராஜா ஆராதனை கமிட்டி) அவர்களுக்கும் வழங்கப்பட்டது.

"மிருதங்க வித்வான்", "நாதத்வீப கலாநிதி", Dr.T.K.மூர்த்தி – இசைத்தமிழ்

"நடிகர்", "இயக்குனர்" காத்தாடி ஸ்ரீ S.ராமமூர்த்தி – நாடகத் தமிழ்

புலவர் ஸ்ரீ V.மகாதேவன்– இயற்றமிழ்

25 ஆண்டுகளுக்கு மேலாக இயல், இசை, நாடகப் பணி ஆற்றிவரும் ஸ்ரீ N.சேகர் அவர்களுக்கு பாராட்டு விழா என ஏனைய கலை வளர்க்கும் தொண்டர்களுக்கும் விருது வழங்கும் விழா, சிறப்பு விருந்தினர்கள் பலர் முன்னிலையில் மகத்தான விழாவாக கொண்டாடப்பட்டது.

## “விஷ்ணு வந்தார்”



நமது விஷ்ணுபுரம் கிராமத்தில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்து பலர் நம்மை பெருமையடையச் செய்து வருகின்றனர். விஷ்ணுபுரத்தின் மகுடத்தில் மேலும் ஒரு வைரக்கல்லாய் ஜொலிக்கிறார் திரு லோகேஷ் ரகுராமன். திரு வெங்கட்ரமணிசாரின் பேரனும் திருமதி பாமா நடேசனின் புதல்வனுமான லோகேஷ் ரகுராமன் “விஷ்ணு வந்தார்” என்றசிறுகதைத் தொகுப்பிற்கு மிக உயரிய விருதான சாகித்ய அகாடமி விருதினைப் பெற்றுள்ளார். இளம் வயதிலேயே தமிழ்மேல் கொண்ட பற்றால் தெளிவான நடையுடன் இந்தத் தொகுப்பை எழுதி பால புரஸ்கார் விருதினைப் பெற்று நமது கிராமத்தை உலகறியச் செய்துள்ளார். நமது கிராம கலாச்சாரத்தைக் கண்முன் கொணர்ந்து கூடவே நம்மையும் பயணிக்க வைக்கிறார். இவரின் சாதனையால் நமது விஷ்ணுபுரம் கிராமமே கர்வம் கொள்கிறது! திரு லோகேஷ் ரகுராமன் அவர்கள் மேன்மேலும் பல சாதனைகள் படைத்து புகழின் உச்சத்தை அடைய இறைவனை வேண்டி நாமும் ஆசீர்வதிப்போம்.

ஜெய் ஸ்ரீராம்.

## முதலமைச்சரின் காலை உணவு திட்டம் துவக்க விழா

குடவாசல் வட்டம், தேதியூர், ஸ்ரீ சங்கரா அரசு உதவி பெறும் நடுநிலைப்பள்ளியில் கர்மவீரர் காமராஜர் பிறந்தநாள் விழாவான இன்று 15/07/2024, திங்கட்கிழமை “முதலமைச்சரின் காலை உணவு திட்டம்” துவக்க விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு பள்ளி நிர்வாகி திரு. பி. வைத்தியநாதன் அவர்கள், பள்ளி செயலர் திருமதி. பி. யோகம் அவர்கள், குடவாசல் வட்டார கல்வி அலுவலர் திரு. க. குமரேசன், எம்.ஏ,பி.எட். அவர்கள், பள்ளி குழு உறுப்பினர் திரு. வா. அனந்தநாராயணன்

**அவர்கள், மணவாளநல்லூர், ஒன்றிய குழு உறுப்பினர் திருமதி. தமிழரசி சுவாமிநாதன் அவர்கள், மணவாளநல்லூர், ஊராட்சி மன்றதலைவர் திருமதி, எஸ் பரக்கத் நிஷா அவர்கள், தேதியூர், ஊராட்சி மன்றதலைவர் திருமதி. வசந்தா பன்னீர்செல்வம் அவர்கள், புதுக்குடி, ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. திவ்யா கணேசன் அவர்கள், குடவாசல் ஒன்றிய பணி மேற்பார்வையாளர் திரு. எஸ். ராஜேஷ் அவர்கள், தேதியூர், மகளிர் குழு அமைப்பாளர் திருமதி. பிரியா அவர்கள், பள்ளி தலைமையாசியர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பங்கு பெற்று மாணவர்களுக்கு உணவு பரிமாறி விழாவினை சிறப்பித்தனர்.**

## New members list

1) Sri R.Swaminathan PM 963

2) Sri Srikrishna Swaminathan PM 964

3) Sri R.V.Sathiya Narayanan PM 965

4) Sri T.S. Dakshinamurthy PM 966

5) Sri Karthik Duraiswamy PM 967

6) Smt Archana Seetharam PM 968

**புதிய உறுப்பினர்களை வரவேற்கிறோம்**

---

## Members upgraded from LM to PM

1) Sri K.Ramamurthy PM 774

2) Sri S.Radhakrishnan PM 104

# MDS SCHOLARSHIP 2024-25

| Sno | Name | Course | Amount | Referred by |
|---|---|---|---|---|
| 1 | Enosh Raj | +2 | ₹ 10000 | Sri.Viswanathan |
| 2 | Hari Shankar | BCom | ₹ 10000 | Smt.Rajeswari Shankar |
| 3 | Pawan Karthikeyan | BCom | ₹10000 | Smt.Lalitha Ramanathan |
| 4 | Nitish Kumar | BCom | ₹20000 | Smt. J.Lalitha |
| | | Total | ₹**50000** | |

## Donors

| | | |
|---|---|---|
| 1 | Sri Gowri Sankar | ₹10000 |
| 2 | Sri Ganesh Srinivasan | ₹10000 |
| | **Total** | ₹**20000** |

Vidhyadhanam Donors are Welcome.
Last year we contributed around ₹ 3 Lakhs
This year too we planned to contribute ₹ 4 Lakhs.
12th Students - ₹10,000
BA,BCom,BSc - ₹15,000
Engg, Medical - ₹20,000

*You may send your contribution to*
*MDS Account by scanning this QR Code*

Please Whatsapp your Name, Address to **Mr. Gowri Sankar Sambasivam- 9444024538**




## MDS GALA MEET - BENGALURU
## 21st July 2024

It was the perfect Bengaluru morning. A slow sunrise, a soft chill in the air and a lazy weekend start for the city. The last part was one not for the Vaathima group which had driven into the Indiranagar all the way from Chennai for the annual Gala meet of the Bengaluru chapter. The EC & Bengaluru working committee of MDS swung into action ensuring that the venue (Kabini Hall) in the famous Indira Nagar Club was prepared to receive the MDS members. The attempt this year was to bridge the old with the new, tradition with technology, practice with practicality. For this the committee members and stalwarts had entrusted the agenda planning to a few of the "next generation" of members based in Bengaluru. The agenda was packed tight and the senior members supported by arranging all the logistics (food, stage and venue) for the event. The crowd started to trickle in and register themselves, in ones, twos and many well into 10AM. The snacks served were the perfect morning jumpstart, a crisp Vada, a continental sandwich and the conversation starter - coffee! The networking part was on in full swing, but the organisers were pressed to cut it short to start at least by 1030 AM. A devotional rendering of a song apt for "Guru Poornima" followed by a read out of last year’s activities by the EC set the ball rolling. Any Bangalore meet has to have a software component, AI was a topic of discussion here. The session true to its name was a "potpourri" of AI

information, - an AI generated temple, a WhatsApp Chatbot lecturer, a guess the logo section and even Mollywood actors deep faked into the iconic Godfather movie. The success however was people in the audience asking questions on subscription pricing and fact checking ChatGPT's response to "Who are the Vaathima?" (Do try the Prompt for some hilarious AI hallucinations!). This was followed by a personal finance & investment advisory session from Integrated Enterprises team, sharing what they are doing to help 100x their customer's wealth. Then was the tiny tot's talent exhibition. Though continuously occupying the stage since morning, they were finally & officially handed mics to grab the audience's full attention with their budding talents. Post these tough acts to follow, we had a session on Vaathima roots, the research theories, some stories and a mnemonic on our origins. This was an important session which held the listener's attention, sparked debate, pride, and ebbed the audience to research the topic more at their end! The serious sessions of the day were wrapped up with a read out on the contribution made by MDS to the larger community around our villages in healthcare & education including our aspirations for FY2024. Notably the success of remote teaching initiative "Vidya Shakti" was shared. It has touched hundreds of teachers, students in India & Sri Lanka begging the shout out from our current prime minister. With so much going on the time was already 1PM! In a first, the majority of the audience decided to postpone their lunch in favour of having the fun MDS lucky dip and the Tambola! Later during lunch, each of the attendees introduced themselves to the rest using a go around mic truly ensuring that all knew each other by name, village and current residence / profession. In line with one of the goals of the meet, one could see conversations and participation around the hall, between the young, new, seasoned and curious. In all the event seemed to have something for everyone to take home, a caricature to laugh at, a tattoo to flaunt, an old connection rekindled, a new investment strategy, an AI chatbot or just a good old Gala meet & eat! Importantly everyone took home a memory of an amazing experience with our community members - a weekend well worth their time!

## கோவில் நிகழ்ச்சிகள்

❖ மரத்துறைகிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சந்நியாசியப்பர் (ஸ்ரீ பாலசாஸ்தா) திருக்கோவில் 7–ஆம் ஆண்டு ஸம்வத்ஸராபிஷேகம் இறையருளாலும், அன்பர்கள் ஒத்துழைப்பாலும் சோபகிருது வருஷம் தை மாதம் 11–ம் தேதி (25–01–2024) வியாழக்கிழமையன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ப்ரசாதமும், அன்னதானமும் வழங்கப்பட்டது.

❖ மரத்துறைகிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ மங்களாம்பிகா ஸமேத ஸ்ரீ ஸர்வலோகநாத ஸ்வாமி ஆலயத்தில் சோபகிருது வருஷம் மாசி மாதம் 25–ம் தேதி (08–03–2024) அன்று வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி முதல் 09–03–2024 காலை 05.30 மணி வரை மகா சிவராத்திரி விழா நான்கு காலம் அபிஷேகம், ருத்ர பாராயணம் ஆகியவை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ப்ரசாதமும், அன்னதானமும் வழங்கப்பட்டது.

❖ ஆனந்ததாண்டவபுரம் கிராமத்தில் அருள்பாலித்து வரும் ஸ்ரீ ப்ரஹன்நாயகி ஸ்ரீ கல்யாணசுந்தரி அம்பிகா சமேத ஸ்ரீ பஞ்சவடீஸ்வர சுவாமி ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 3–5–2024 வெள்ளிக்கிழமை அன்று பக்தகோடிகள் பலர் கலந்து கொண்டு மிகவும் விமரிசையாக நடந்தேறியது.

❖ ஸ்ரீராமசமுத்திரம் (அயலூர்) கிராமத்தில் 78–ம் ஆண்டு ஸ்ரீராமநவமி மஹோத்ஸவம் 10–5–2024, வெள்ளிக்கிழமை முதல் 12–5–2024, ஞாயிற்றுக்கிழமை வரை வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

❖ மாந்தை கிராமத்திலுள்ள ஸ்ரீ பூர்ணா, புஷ்கலா, ஸமேத ஹரிஹரபுத்திர ஸ்ரீ ஐய்யனார் திருக்கோயிலில் வைகாசி மாத ஏகாதசி திதி, சித்திரை நக்ஷத்ரம் கூடிய சுபயோக சுபதினத்தில் வார்ஷீக ருத்ராபிஷேகம் – 2024, 19.05.24 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை ஸ்ரீ சாஸ்தா சன்னிதியில் வேத ரித்விக்குகள் 11 பேரை கொண்டு 11 முறை (அதாவது 121 ஆவர்த்தி) ஸாமவேத ருத்ர ஜபம் நடைபெற்றது. அதன் பின்னர் ஸ்ரீ பூர்ணா, புஷ்கலா, ஸமேத ஹரிஹரபுத்திர ஸ்ரீ ஐய்யனாருக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்காரம் செய்யப்பட்டது.

❖ திருக்கோடிகாவல் அருள்மிகு ஸ்ரீ பூர்ணா புஷ்கலா சமேத ஸ்ரீ மஞ்சனி அய்யனார் ஆலய 21/05/2024 முதலாம் ஆண்டு ஸம்வத்ஸராபிஷேகம் தினத்தை முன்னிட்டு ஹோமம், அபிஷேகம் தீபாராதனை சிறப்பான முறையில் நடைபெற்றது.

❖ அருள்மிகு திருக்கோடீஸ்வரர் திருக்கோயிலில் வைகாசி விசாகம் 22–5–2024 புதன்கிழமை அன்று அபிஷேகம் ஆராதனை மற்றும் முருகப்பெருமான் வீதி உலா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.


❖ முடிகொண்டான் கிராமத்தில் அருள்மிகு வடபத்ரகாளியம்மனுக்கு 24–5–2024 வெள்ளிக்கிழமை அன்று திருவிழா நடைபெற்றது. அன்று அதிகாலை 3 மணிக்கு அம்பாள் எழுந்தருளி, அதிகாலை 5 மணிக்கு மேல் பழவர்க்கம் அன்னம் நிவேதியங்களுடன் முதல் பூஜை நடைபெற்றது. காலை 9 மணிமுதல் ஸ்ரீ வடபத்ரகாளியம்மன் திருவீதியுலா நடைபெற்றது. 27–5–2024 திங்கட்கிழமை காலை வரை அருள்மிகு காளியம்மனின் அருள் ஆசி பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

❖ வாத்திமா பிக்ஷாவந்தனம் வருடாவருடம் ஸ்ரீ விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் ஜன்ம தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்த வருடம் 7–8–2024, புதன்கிழமை அன்று சாதுர்மாஸ்ய விரதத்தையொட்டி பால பெரியவா முகாமிட்டுள்ள ஓரிக்கையில் ஸ்ரீமதி சீதா ஸபேசன் அவர்கள் தலைமையில் விமரிசையாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

❖ ஆனந்ததாண்டவபுரம் ஸ்ரீ பெருமாள் கோயிலில் ஸ்ரீ ஞானகுரு பாகவதர் குழுவினரால் கோகுலாஷ்டமி பஜனை வைபவம் 31–8–24 சனிக்கிழமை மற்றும் 01–9–24 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தேதிகளில நடத்த நிச்சயிக்கப்பட்டுள்ளது. நமது சமூக ஆன்மீக அன்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்க வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

❖ ஸ்ரீ துர்காமணி சுந்தர கீதா பாகவத டிரஸ்டின் (ஆனந்ததாண்டவபுரம் ஸ்ரீ சுந்தரேச ஐயரால் துவங்கப்பட்டது) 8–ம் ஆண்டு ஸ்ரீ சீதாராம கல்யாண மஹோத்ஸவம் 10–8–24, சனி மற்றும் 11–8–24, ஞாயிறு அன்று பெங்களூரில் கலைமாமணி உடையாளூர் Dr.K.கல்யாண ராமன் குழுவினரின் பஜனை சம்ப்ரதாய முறைப்படி நடைபெறவுள்ளது.

**சதாபிஷேகம்**



❖ நமது உறுப்பினர் கோனேரிராஜபுரம் ஸ்ரீ பாலசுப்ரமணியன் (அங்குவாம்) – ஸ்ரீமதி பத்மா தம்பதியரின் சதாபிஷேக வைபவம் **3–6–2024,** திங்கட்கிழமை அன்று திருச்சி ஸ்ரீரங்கத்தில் மிகவும் விமரிசையாக நடைபெற்றது.

❖ நமது உறுப்பினர் திப்பிராஜபுரம் ஸ்ரீ S.இராமசுவாமி (LM 022) – ஸ்ரீமதி R.சுப்புலஷ்மி தம்பதியரின் சதாபிஷேகம் **12–7–2024,** வெள்ளிக்கிழமை அன்று கும்பகோணத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது. சமாஜ சம்பாவனை– ரூ. 1000

❖ நமது உறுப்பினர் திப்பிராஜபுரம் ஸ்ரீ S.இராமன் (LM 286) – ஸ்ரீமதி R.சாந்தா தம்பதியரின் சதாபிஷேகம் **28–6–2024,** வெள்ளிக்கிழமை அன்று கும்பகோணத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது.

சமாஜ சம்பாவனை– ரூ. 1000

❖ செம்மங்குடி V.கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்களின் ஸ்வீகார குமாரனும், தட்டாத்திமூலை N.அய்யாசாமி அய்யர் அவர்களின் ஜனக குமாரனுமான மகாஸ்ரீ வெங்கட்ராமன் (LM 144) அவர்களுக்கு ஷஷ்டியப்த பூர்த்தி ஸாந்தியும், சௌபாக்யவதி ஜானகிக்கு ஸ்ரீமாங்கல்ய தாரணமும் **12–7–2024,** வெள்ளிக்கிழமை அன்று கும்பகோணத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது.

சமாஜ சம்பாவனை– ரூ. 5000

❖ கோனேரிராஜபுரம் ஸ்ரீ S.கோபாலன் (LM 399) (அங்கு R. ஸ்ரீநிவாசய்யர் குமாரன்)– ஸ்ரீமதி கல்யாணி அவர்களின் சதாபிஷேக சுபமுகூர்த்தம் **7–7–2024** ஞாயிற்றுக்கிழமை அன்று கும்பகோணத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

# பிரபௌத்ர சாந்தி

– ஸ்ரீமதி உமா வெங்கட்

❖ எங்கள் குலதெய்வம் ஸ்ரீ வீரன் அருளாலும், பரமாச்சாரியாள், காஞ்சிப் பெரியவா ஸ்ரீ ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் பூரண ஆசியுடனும் எங்கள் புத்திரன் சிரஞ்சீவி. கார்த்திக்கின் குமாரன் அர்ஜுனின் முதல் அப்த பூர்த்தி கும்பகோணம் காசிராமன் தெருவில் உள்ள எங்கள் கிருஹத்தில் நடந்தது. அதே தினத்தில் தேதியூர் நாராயண ஸ்வாமி ஐயர் புத்ரனும், என் கணவரின் தகப்பனாருமான ஸ்ரீ சுவாமிநாத ஐயர், அவரது மனைவி ஸ்ரீமதி விசாலம் இருவருக்கும் பிரபௌத்ர சாந்தி நெருங்கிய சொந்தங்கள் கூடியிருக்க, வைதீக முறைப்படி கும்பகோணம் ஸ்ரீ பிச்சை வாத்தியார் தலைமையில், நடந்தேறியது. மிருத்யஞ்ச ஹோமம் நடந்து, கொள்ளுப் பேரன் கையால் கனகாபிஷேகம் பண்ணிக் கொண்டு இருவரும் லக்ஷ்மி நாராயணர் ஸ்வரூபமாய் அனைவரையும் வாழ்த்தி ஆசீர்வதித்தது பரமானந்தமாய் இருந்தது. அதன் பின்னர் இருவரும் ஒருநாள் காஞ்சி மடத்திற்கு சென்றபோது இதைப் பற்றி பெரியவாளிடம் சொல்லியதும், பெரியவா மிகுந்த மகிழ்ச்சியடைந்து அதைப் பற்றி நிறைய விவரங்கள் கேட்டறிந்து, தன் கையால் பிரசாதம், சௌபாக்கிய திரவியங்கள், வளையல்கள் கொடுத்து ஆசீர்வதித்தது கூடுதல் பாக்கியம்.

இதை நமது வாத்திம சொந்தங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.



## திருமணம்
## வாழ்த்துகள் / ஆசிர்வாதங்கள்

❖ மேலப்பாலையூர் ஸ்ரீ S.ராஜாராமன்–ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மி தம்பதியரின் குமாரன் சிரஞ்சீவி சாய் ஆனந்த் (எ) அனந்தசுப்ரமணியன்–க்கும் தேதியூர் ஸ்ரீ Dr.R.சந்திரசேகரன்–ஸ்ரீமதி Dr.உமா தம்பதியரின் குமாரத்தி சௌ ப்ரியங்கா விற்கும் விவாஹம் **22–1–2024** திங்கட்கிழமை அன்று பாண்டிச்சேரியில் மிக சிறப்பாக நடைபெற்றது.

❖ மரத்துறை ஸ்ரீ K.ராமன் (SM, இந்தியன் வங்கி ஓய்வு) – ஸ்ரீமதி ரேவதி தம்பதியரின் குமாரனுமான சிரஞ்சீவி. முகுந்த் (எ) முகுந்தகிருஷ்ண சர்மாவிற்கும், மதுரை ஸ்ரீ S.கல்யாணசுந்தரம்–ஸ்ரீமதி அன்னபூரணி தம்பதியரின் குமாரத்தியுமான சௌபாக்யவதி சுபஸ்ரீ க்கும் விவாஹ சுபமுகூர்த்தம் **15–02–2024** வியாழக்கிழமை அன்று மதுரையில் மிகவும் விமரிசையாக நடைபெற்றது.

❖ மரத்துறை ஸ்ரீ K.ஸ்ரீதரன் (Asst, Commissioner of Police ஓய்வு)–ஸ்ரீமதி புஷ்பலதா (SM, பஞ்சாப் நேஷனல் வங்கி) தம்பதியரின் குமாரனுமான சிரஞ்சீவி S.ராமேஷ்வர் (எ) ஆனந்த்க்கும் நாகை மாவட்டம் கிடாரம் கொண்டான் ஸ்ரீ S.சந்திரமௌலி–ஸ்ரீமதி பார்வதி தம்பதியரின் சீமந்த புத்திரியுமான சௌ C.அன்னபூரணி (எ) வைஷ்ணவிக்கும் விவாஹ சுபமுகூர்த்தம் **20–3–2024** புதன்கிழமை அன்று சென்னையில் மிகவும் விமரிசையாக நடைபெற்றது. மேலும் **22–3–2024** வெள்ளிக்கிழமை அன்று திருச்சியில் திருமண வரவேற்பு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

❖ மரத்துறை ஸ்வர்கீய ஸ்ரீமான் குஞ்சிதபாத அய்யர்–ஸ்ரீமதி விசாலம் குஞ்சிதம் (PM930) அவர்களின் பௌத்திரனும், சேங்காலிபுரம் ஸ்ரீ S.R.சுப்ரமண்ய அய்யரின் (PM012) தௌஹித்ரனும், ஸ்ரீ ரமேஷ் குஞ்சிதம் (PM322) –ஸ்ரீமதி விஜி ரமேஷ் தம்பதியரின் குமாரனுமான சிரஞ்சீவி நவநீத் க்ருஷ்ணா வுக்கும் பொய்கைப்பாக்கம் கோவில் கந்தாடை ஸ்ரீமான் சம்பத்குமார்–ஸ்ரீமதி லஷ்மி சம்பத்குமார் தம்பதியரின் குமாரத்தி சௌ தீப்தி (எ) தீப்திலஷ்மி க்கும் விவாஹம் **19–5–2024** அன்று அமெரிக்க நாட்டின் கலிபோர்னியா மாஹாணத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது.

❖ தட்டாத்திமூலை ஸ்ரீமான் அய்யாஸ்வாமி அய்யர் அவர்களின் பௌத்ரியும், பெரம்பூர் ஸ்ரீமான் R.ஸத்யமூர்த்தி அய்யர் அவர்களின் தௌஹித்ரியும் ஸ்ரீ A.ரகுராமன் (PM 273)–ஸ்ரீமதி பத்மா தம்பதியரின் குமாரி சௌ மைதிலி–க்கும் திருச்சி ஸ்ரீமான்

V.ஸ்ரீநிவாஸ அய்யர் பௌத்திரனும், ஸ்ரீமான் S.சுந்தரேசன்–சௌ ராஜஸ்ரீ தம்பதியரின் குமாரன் சிரஞ்சீவி ஸ்ரீராம் (எ) நாராயணஸ்வாமி சர்மா விற்கும் விவாஹம் **7–7–2024** ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னையில் மிகவும் விமரிசையாக நடைபெற்றது.

### ப்ரஹ்மோபதேச சுபமுகூர்த்தம்



❖நமது உறுப்பினர் கோனேரிராஜபுரம் ஸ்ரீ V.காசிராமன் (PM 389) – ஸ்ரீமதி ப்ரீத்தி தம்பதியின் குமாரன் சிரஞ்சீவி வித்யுத் ராம் ற்கு உபநயன ப்ரம்மோபதேசம் **26–4–2024** வெள்ளிக்கிழமை அன்று சென்னையில் விமரிசையாக நடைபெற்றது.

சமாஜ சம்பாவனை – ரூ. 1000

❖ நமது உறுப்பினர் சேங்காலிபுரம் ஸ்ரீ N.V.தியாகராஜன் (எ) ராஜூ – ஸ்ரீமதி பத்மா தம்பதியரின் பௌத்திரனும் சிரஞ்சீவி தத்தபிரசாத்– ஸ்ரீமதி கல்பனா தம்பதியரின் சீமந்த குமாரன் சிரஞ்சீவி கபில் வாசுதேவ் தத்தா விற்கு உபநயன ப்ரம்மோபதேசம் **26–5–2024** ஞாயிற்றுக்கிழமை அன்று கும்பகோணத்தில் சிறப்பாக நடைபெற்றது.

❖ நமது உறுப்பினர் திருக்கோடிக்காவல் ஸ்ரீ V.ராகவன் (LM 274) அவர்களின் பௌத்திரனும், சிரஞ்சீவி R.கணேஷ்– சௌ பாரதி தம்பதியின் புத்ரனுமான சிரஞ்சீவி நிரஞ்ஜன் (எ) ஸ்ரீநிவாஸ சர்மா விற்கு உபநயனம் **9–6–2024** ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னையில் மிக சிறப்பாக நடைபெற்றது.

சமாஜ சம்பாவனை – ரூ. 501

❖ நமது உறுப்பினர் மொழையூர் ஸ்ரீ வெங்கட்ரமணி – ஸ்ரீமதி மோகனா தம்பதியரின் தௌஹித்ரனும் ஸ்ரீ மணிகண்டன் – ஸ்ரீமதி ரேணுகா தம்பதியரின் குமாரன் சிரஞ்சீவி சாய் தக்ஷின்–ற்கு உபநயன ப்ரம்மோபதேசம் **9–6–2024** ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னையில் விமரிசையாக நடைபெற்றது.

## வீழிநாதன் ஒரு சகாப்தம்

– ஸ்ரீமதி ரேணுகா காமகோடி



தன் பேச்சு, மூச்சு, செயல் எல்லாம் ஸ்ரீ ஸ்ரீ மஹா பெரியவா காட்டிய தர்ம நெறிகளைப் பின்பற்றி வாழ்ந்த திரு. N.வீழிநாதன், 09–06–2024 அன்று காலை 11 மணிக்கு பரமாச்சார்யாளின் பாதாரவிந்தங்களை அடைந்தார். இப்படி தான் வாழ வேண்டும் என்று ஒரு எடுத்துக் காட்டாக கலியுகத்தில் வாழ்ந்த மகான்.

பெரியவா அனுக்ரஹத்தில் விஷ்ணுபுரம் சேஷூவாத்து வீழிநாதன் குடும்பத்தில் ஒரு மருமகளாக வந்த என்னை தன் (மறு) மகளாக கருதினார். அவர் தன் மகனுடன் ஊருடல் ஒருயிராக வாழ்ந்த தருணங்களைக் கண்டு நான் வியந்ததுண்டு. சிறு வயதில் தந்தையை இழந்த எனக்கு, இறைவன் கொடுத்த வரம், இவர்.

நான்கு தலைமுறைகளாக காஞ்சி காமகோடி பீடத்தில் ஸேவை செய்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். அன்றாடம் அவர் கூறும் வார்த்தை "நம்ம மடம். நம்ம பெரியவா". அதைச் சொல்லும் பொழுது அவர் கண்களில் ஒரு வாத்ஸல்யம், கம்பீரம் தெரியும். அன்றாடம் அவர் சொல்லும் மஹா பெரியவா மஹிமையும், அவர் மஹா பெரியவாளோடு கேம்ப் சென்றஅனுபவங்களும், புத்தகங்கள் எழுதத் தூண்டிய மஹா பெரியவாளுடன் அதைக்குறித்த கலந்துரையாடல்களை அவர் விவரிக்கும் விதம், எல்லாமே தனி அழகு.

ஆரம்ப காலத்தில், தேதியூர் ஸ்ரீ S.கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளிடம் விஷ்ணுபுரத்தில் ஸமஸ்கிருதம் படித்தார். ஸமஸ்கிருதத்துறைபிரபலம் அடையாத காலகட்டத்தில், மஹா பெரியவா சொற்படி, அந்தத் துறையிலேயே படித்து ஒரு வித்வானாகத் திகழ்ந்தவர். வேதாந்தம்,

நியாயம், தர்க்கம் போன்றதுறைகளில் கைதேர்ந்தவர். மஹா மேதைகளான Dr. T.M.P. மஹாதேவன், ஸ்ரீ S.R. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், ஸ்ரீ N.S. ராமானுஜ தாதாச்சாரியார் போன்றவர்களிடம் பாடம் பயின்றவர். காளிதாசன் காவியங்களையும் Winston Churchill, Bertrand Russell ஆகியோர் படைப்புகளையும் நன்கு ரசித்து படித்தவர். பல சாஸ்திர புத்தகங்களை ஒன்று தானே எழுதி, மற்றொன்று ஸ்ரீ மஹா பெரியவா ஆஞ்யை படி எடிட்டிங் செய்து ஆதி ஸங்கரா ரிசர்ச் சென்டர் மற்றும் SSSMM trust – காஞ்சி மஹாஸ்வாமி சதாப்தி மணிமண்டபம் மூலம் வெளியிட்டார். அவர் புத்தகங்கள் போடும் பொழுது 'typesetting' மற்றும் எடிட்டிங் செய்வதில், நான் அவருக்கு உதவிய அனுபவம் மறக்க முடியாத ஒன்று. அவர் ஒரு perfectionist. புத்தகம் எழுதும் பொழுதும், எடிட்டிங் செய்யும் பொழுதும், தேடித் தேடி அவர் refer செய்யும் புத்தகங்கள், ஓலைச்சுவடிகள் ஏராளம். வீட்டிலேயே ஒரு மாபெரும் லைப்ரரி அமைத்துக் கொண்டவர். அவர் மிகவும் விரும்பிய பொருட்கள் பேனாவும், பென்சிலும் மட்டுமே.

அவரிடம் படித்த மாணவர்கள் இன்று பல யுனிவர்சிடிகளில் பெரிய பதவி வகிக்கின்றனர். தன்னலம் கருதாமல் பிறர் நலன் போற்றியவர். வாழ்வில் தடங்கல் வரும் வேளையில், கேட்பவருக்கெல்லாம் தகுந்த ஸ்லோகங்கள் பரிந்துரைத்து (சவுந்தர்ய லஹரி) பாராயணம் செய்யச் சொல்வார். அந்த தடங்கல்கள் நீங்கி அவர்கள் தாங்கள் மகிழ்ச்சியாக இருப்பதாகச் சொல்லும் பொழுது, மனப்பூர்வமான ஆசிர்வாதங்களை அளிப்பார். அன்றாடம் "மூக பஞ்ச ஸதி" பாராயணமும், பெரியவா பாத பூஜையும் செய்தவர்.

ஸமஸ்கிருதம் ஒன்றைத்தவிர வேறொன்றும் தெரியாது என்று அடிக்கடி சொல்லுவார். அந்த ஒன்றின் மூலம் அவருக்கு இந்தியா முழுவதும் கிடைத்த தொடர்புகளும் விருதுகளும் ஏராளம். பாரத ரத்னா M.S.சுப்புலட்சுமி, Dr.கரன்சிங், மஹாராஜா பரீக்ஷித் ராமவர்மா, ஸ்ரீ சங்கர் தயாள் சர்மா, Dr.பத்ரிநாத் போன்றோரும் இதில் உண்டு. 2002 ஆம்

ஆண்டு, மிக உயரிய விருதான "Proficiency in Sanskrit" விருதினை அன்றைய ஜனாதிபதி திரு. அப்துல் கலாம் அவர்களிடம் பெற்றவர்.

அவர் வாழ்ந்த வீட்டில் அவருடன் வாழும் பாக்கியம் பெற்றது ஈரேழு ஜன்மங்களில் நாங்கள் செய்த புண்ணியத்தினாலே என்று நினைக்கத் தோன்றுகிறது. அவரது நகைச்சுவை, மேதா விலாஸம், ஞாபக சக்தி, எளிமையான வாழ்க்கை, தர்ம குணங்கள், எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு தலை சிறந்த ஆசிரியர், தன் மனதில் தோன்றியதை தயக்கமின்றி கூறுபவர் – இப்படி அவரைப் பற்றி கூறுவதற்கு விஷயங்கள் ஏராளம்.

அவர் மறைவதற்கு முன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பொழுது அவர் இருந்த 18 நாட்களும், ஒவ்வொரு நாளும் ஒரு அத்யாயம் பகவத் கீதை படித்த மாதிரி, எங்களுக்கு அவர் மன வலிமை கொடுத்து, எதையும் தாங்கும் சக்தி அளித்தவர். மானிடராய் பிறந்த எல்லோரும் ஒரு நாள் மறைவது இயற்கை. இன்றும், "அப்பா" எங்களுடனேயே இருப்பது போன்று உணர்கிறோம். அவர் வாழ்ந்த வீட்டில் ஒவ்வொரு அறையும், ஒவ்வொரு செங்கல்லும் அவர் கூறிய "பெரியவா" புராணங்களைச் சொல்வதாகவே நினைக்கிறோம்.

அவர் எங்களுக்குச் செய்த உபதேசங்கள்

– அடக்கமாக இருப்பது,
– பணம், பதவி, புகழ் மீது ஆசையில்லாது இருப்பது,
– தர்ம வழியில் நடப்பது,
– பிறர் நலன் பேணுவது,
– நம்முடைய கலாச்சாரப்படி ஒழுக்கமான வாழ்க்கை வாழ்வது.

இது அத்தனையும் தன் வாழ்வில் கடைபிடித்து, அடுத்து வரும் தலைமுறைகளையும் பின்பற்றவழி வகுத்தவர். "வீழிநாதன் ஒரு சகாப்தம்" என்றால் அது மிகையாகாது.

## காலமானார் - வருந்துகிறோம்

- முடிகொண்டான் ஸ்ரீமதி கமலாம்பாள் **(86),** ஸ்ரீ ராதாகிருஷ்ணன் (NRK) அவர்களின் துணைவியார் அவர்கள் **6–5–2024** அன்று பெங்களூரில் காலமானார். இவர் பெங்களூர் சமாஜ தலைவர் ஸ்ரீ முரளி (நடராஜன்) (PM 083) மற்றும் ஸ்ரீமதி நளினி அவர்களின் தாயார் ஆவார். அவரது குடும்பத்தினருக்கு சமாஜத்தின் ஆழ்ந்த இரங்கல்கள்.

- நமது உறுப்பினர் விஷ்ணுபுரம் ஸ்ரீ N.வீழிநாதன் (LM 290) **(86)** அவர்கள் சென்னையில் **9–6–2024** அன்று காலமானார். இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருதத் துறையின் HOD ஆக பணி புரிந்தார். இவர் காஞ்சி மடத்தின் தீவிர பக்தர். இவர் IIT Director ஸ்ரீ V.காமகோடி அவர்களின் தகப்பனார் ஆவார். இவரின் குடும்பத்தினருக்கு சமாஜத்தின் சார்பாக ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

- புலியூர் ஸ்ரீ K.சங்கரன் **( 71 )** (LM 573) அவர்கள் **5–7–2024** அன்று புலியூரில் காலமானார். இவர் நமது உறுப்பினர் ஸ்ரீமதி லஷ்மி அருண் (LM 782) அவர்களின் தகப்பனார் மற்றும் ஸ்ரீமதி விசாலம் அவர்களின் கணவர் ஆவார்.

- புலியூர் ஸ்ரீமதி N.கமலம் **(92)** (W/O Late ஸ்ரீ நாகோஜி) அவர்கள் **11–5–2024** அன்று புலியூரில் காலமானார். இவர் நமது உறுப்பினர் ஸ்ரீ N.ஸ்ரீராமன் (LM 647) அவர்களின் தாயார் ஆவார்.



செம்மங்குடி கோவிலில் குரு பெயர்ச்சி அபிஷேகம்




திருக்கோடிக்காவல் அருள்மிகு திருக்கோடீஸ்வரர் ஆலய
குரு பெயர்ச்சி சந்தன காப்பு அலங்காரம்



மாப்படுகை கிராமவாசிகளின் குலதெய்வமான பூர்ண புஷ்கலாம்பாள்
சமேத ஸ்ரீ ஐயன் பீடாஹரி கூட்டுப் பிரார்த்தனை



மொழையூர் கிராமம்
அருள்மிகு வரதராஜ பெருமாள் கோவில் பாலாலயம்



கோனேரிராஜபுரம் ஸ்ரீ உமாமகேஷ்வரர் ஆலய
வைகாசி உத்ஸவ பெருவிழா - ஓலை சப்பரத்தில் வீதி உலா



விஷ்ணுபுரம் ஸ்ரீ மகா மாரியம்மன்
ஆடி வெள்ளி சிறப்பு அலங்காரம்

CUB
Trust and Excellence
Since 1904

CITY UNION BANK LTD

## பெங்களூரில் 21-7-24 அன்று நடந்த **MDS Meet**




இறை வணக்கம் - ஶ்ரீமதி அபர்னா




MDS மையக் கமிட்டி உறுப்பினர்கள்



Integrated நிறுவனத்தினர் வழங்கிய
Financial Planning Session



ஸ்ரீ ராமன் சங்கரன் - AI பற்றிய ஓர் அறிமுகம்



கூட்டத்தினரின் ஒரு பகுதி



குட்டீஸ் கார்னர்

**Printed by : RST OFSET PRINTERS, Mylapore, Chennai - 600 004. Ph : 044 2466 2054**